# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



## மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு.M.ஸ்ரீதர், B.E., M.Plan.,

ந.க.எண்.1303/2019/விமா2 நாள்: .09.2020

பொருள்: மனைப்பிரிவு — மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் — விழுப்புரம் மாவட்டம் — விக்கிரவாண்டி வட்டம் — விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் — வேம்பி கிராமம் — ச.எண்கள். 171/6, 171/7, ஆகியவற்றில் 5.61 ஏக்கர் 22700.00 ச.மீ பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் — தொடர்பாக.

பார்வை:

1) மனுதாரர் திரு.P.திருநாவுக்கரசு, பீரங்கிமேடு கிராமம், செஞ்சி, அவர்களின் (Online Application -201905301012705 - நாள்: 25.06.2019
2) அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M.A 1) நாள் 04.02.2019.
3) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 16.06.2003.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/LA2, நாள்19.04.2012 மற்றும் 24.05.2012.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/1988/பிசிசி, நாள் 27.04.1988.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல் ஏ2, நாள்: 07.11.2002.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16985/2000/எல்ஏ2, நாள் 29.09.2007.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12544/2014/சிபி, நாள் 04.07.2014.
9) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD4(3)] துறை நாள்:04.05.2017
10) வட்டார வளர்ச்சி அலுவலர், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ2/ 3964/ 2019 நாள்:17.03.2020
11) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:11.09.2020 (நன்னிலை வரி செலுத்தக் கோரியது)
12) மனுதாரர் நன்னிலை வரி செலுத்தி விபரம் பெறப்பட்ட நாள்:14.09.2020

-----

உத்திரவு:

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், வேம்பி கிராமம்-- ச.எண்கள். 171/6, 171/7, ஆகியவற்றிற்க்குட்பட்ட 5.61 ஏக்கர் (அ) 22700.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரி பார்வை 1—ல் காணும் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

P.திருநாவுக்கரசு

பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையின்படி மனைப்பிரிவில் அமையும் உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா பொது ஒதுக்கீடு 'A' என குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை (0.50%) வட்டார வளர்ச்சி அலுவலர் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு தானப்பத்திரம் எண்.4140/2019 நாள்:27.12.2019 – ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான ஆவண நகல் பெறப்பட்டுள்ளது.

மேலும், பார்வை (2)ல் கண்டுள்ள அரசாணையின்படி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் 'B' என குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை (0.52%) கண்காணிப்பு பொறியாளர்(TANGEDCO), விழுப்புரம் மின் பகிர்மான வட்டம், விழுப்புரம் அவர்களுக்கு தானப்பத்திரம் எண்.4141/2019 நாள்:27.12.2019–ன் படி ஒப்படைப்பு செய்து அதற்கான ஆவண நகல் பெறப்பட்டுள்ளது.

பார்வை (11)ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (12)ல் காணும் மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.37,500/–(ரூபாய் முப்பத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) SBI, விழுப்புரம் கிளையில் 14.09.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், அனுமதி பெற்ற மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தொழில்நுட்ப அனுமதி எண். ஆகியவற்றை குறிக்கும் அறிவிப்பு பலகை (Display Board) வைப்பதற்கு வைப்பு தொகையாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 14.09.2020 அன்று The Assistant Director of Town and Country Planning, Villupuram Region, Villupuram, Corporation Bank, Villupuram Branch Account No.510101006863281-ல் செலுத்தியதன் அசல் செலுத்துச்சீட்டு (Original Challan) பெறப்பட்டுள்ளது.

மனுதாரர் கொடி நாள் நிதிக்காக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) In favour of Armed Force Flag day fund, Villupuram என்ற பெயரில் வரைவோலையின் (Demand Draft No.495721 அசல் நாள்:14.09.2020 மற்றும் மனுதாரர் பெயரில் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)–க்கு சிறுசேமிப்பு பத்திரம் நாள்:15.09.2020–ன் நகல் பெறப்பட்டுள்ளது.

இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு <u>ம.வ/ந.ஊ.உ.இ(விமா2)எண்.**39/2020**</u> என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை (5) மற்றும் (6)ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வை (3)ல் காணும் அரசாணையின்படி இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(இ),(உ)குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சி மன்றம் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பார்வை (9)ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண்.3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/– மற்றும் விதி எண்.9–ன்படி அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன் மாற்றக் கட்டணமாக கீழ் காணும் அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வதுல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

P. [signature]

**Head of Account: (Land use Conversion Charge)**

0217 Urban Development – 60
Other Urban Development Schemes 800
Other Receipts-AS Receipts Under
Land use conversion charges -27
Non Taxation fees – 09 collections.
**DPC: 0217-60-800-AS – 2790**

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது, மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஊ)–ன்படி, அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms.No.71, RDLA dated 16.06.2003 & G.O.No.134,M.A.WS, dated 20.09.2002 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

பார்வை (10)ல் காணும் ஊராட்சி ஒன்றிய கடிதம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை தனி புல உட்பிரிவு பெற ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு: | 5.61 ஏக்கர் (அ) 22700.00 ச.மீ | |
| கோரிய மனைகள்: | 125 | |
| ஒதுக்கிய மனைகள்: | 123<br>[இவற்றில் எளியோர் வாழும் குடியிருப்பு மனைகள் (Economically Weaker Section Plots) மனைகள் 40 to 42, 57to 66, 73 to 74, 86 to 89, 97 to 103, 108 to 110) | |
| I. மனுதாரர் விற்பனைக்குரியது | | |
| கடை (I) | 139.00 ச.மீ | ----1.24% |
| கடை (II) | 144.00 ச.மீ | |
| II. பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு தானமாக மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டவை | | |
| பூங்கா | 1441.00 ச.மீ | ----10.14 % |
| A- | 69.00 ச.மீ | ----0.50% |
| B- (TANGEDCO) | 75.00 சமீ | ----0.52% |

(ஒ) [signature]

சிறப்பு நிபந்தனைகள்:

1) பார்வை 8—ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனையின்படி "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருந்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா என்பதை செயல் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3) மனுதாரரால் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள், பூங்கா மற்றும் திறவிடம் பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் சொத்து கணக்கில் பதிவு செய்யப்பட்டதன் விவரத்தினை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை மனுதாரர் மற்றும் உள்ளாட்சி கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) மனைகள் மற்றும் சாலைகள் அங்கீகரிக்கப்பட்டு <u>ம.வ/ந.ஊ.உ.இ(விமா2) எண்.39/2020</u> எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உத்தேச மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம், மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உத்தேச மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட ஆணையின் நகலையும்

P. திருநாவுக்கரசு

இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –2 தொகுப்பு

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மாவட்டம்,
விழுப்புரம்.

பெறுநர்:
1) வட்டார வளர்ச்சி அலுவலர்,
விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

2) சார்பதிவாளர்,
விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலகம்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல்:
திரு. P. திருநாவுக்கரசு,
த/பெ. புத்தியப்பன்,
எண். 90, திருவள்ளுவர் தெரு,
பீரங்கிமேடு கிராமம்,
செஞ்சி வட்டம்,
விழுப்புரம்.

P. திருநாவுக்கரசு.

**விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),(பொ) அவர்களின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை:திரு.பு.எழிலரசு.Bsc.,**

ந.க.ஆ1/3964/2019 நாள்: .10.2020.

பொருள் : புதிய மனைப்பிரிவு – விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் – வேம்பி ஊராட்சி – சர்வே எண்கள்:171/6, மற்றும்171/7–ல் 22700.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்.

பார்வை : 1. விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.1303/2019/விமா2 நாள்:18.09.2020.

2. வேம்பி ஊராட்சி மன்ற தீர்மானம் எண்:648 நாள்:28.01.2020

3.விக்கிரவாண்டி, வருவாய் வட்டாட்சியர், அவர்களின் கடிதம் ஒ.மு.(அ2)/6049/2020 நாள்:20.10.2020

———— –

**உத்தரவு:**

விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம்,வேம்பி ஊராட்சி – சர்வே எண்கள்:171/6 மற்றும் 171/7–ல் 22700.00 ச.மீ பரப்பளவில் புதியதாக அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1–ல் காணும் விழுப்புரம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் செயல் முறை நடவடிக்கையில் நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு அமையவுள்ள சாலைகள் மற்றும் பூங்கா பகுதிகள் மனுதாரரால் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

**மனைப்பிரிவின் விவரம்**

| | |
|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | : 22700.00 ச.மீ |
| கோரிய மனைகள் | : 125 |
| ஒதுக்கிய மனைகள் | : 123 |
| மனுதாரர் விற்பனைக்குரியது கடை (1) | : 139.00 ச.மீ |
| மனுதாரர் விற்பனைக்குரியது கடை (2) | : 144.00 ச.மீ |
| பூங்கா | : 1441.00 ச.மீ |
| பொது ஒதுக்கீடுகள் A | : 69.00 ச.மீ |
| பொது ஒதுக்கீடுகள் B (TANGEDCO) | : 75.00 ச.மீ |
| நில பயன்மாற்ற கட்டணம் | : ரூ.85600.00 |

P. [signature]

மேலும் பார்வை 3—ல் காணும் கடிதத்தில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமையவுள்ள இடம் நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)—ன் படி பிரகடனம் ஏதும் செய்யப்படவில்லை மற்றும் நில ஆர்ஜித பட்டியலில் (Land Plan Shedule) கவரப்படவில்லை என தெரிவித்ததின் அடிப்படையில் பார்வை 1—ல் காணும் விழுப்புரம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வேம்பி ஊராட்சியில் சர்வே எண்கள்:171/6 மற்றும் 171/7-ல் 22700.00ச.மீ பரப்பளவில் ம.வ/ந.ஊ.உ.இ (விமா2) எண்:39/2020 எண்ணிடப்பட்டு அமையும் புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்காணும் நிபந்தனையுடன் இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனை:

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் புதிய மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)பொ,
விக்கிரவாண்டி ஒன்றியம

பெறுதல்:

திரு.P.திருநாவுக்கரசு.,
த/பெ புத்தியப்பன்,
எண்:90, திருவள்ளுவர் தெரு,
பீரங்கிமேடு கிராமம்,
செஞ்சி வட்டம்,

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), விழுப்புரம்

நகல்:நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம்.

நகல்: சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்,
விக்கிரவாண்டி. (பத்திர பதிவுக்கு)

## our services doesn't just end there



### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions
with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate